# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

## OS. No. 123/2020 நாள்.17.2.2026

### DW2- திருமதி.மும்தாஜ்பேகம், க/பெ. திரு.ஹயாத்கான்

வாதி தரப்பில் குறுக்குவிசாரணை

வாதி எதற்காக வழக்கு போட்டார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. சொத்து ஆதியில் என் கணவருக்கு பாத்தியபட்டது என்றால் ஆமாம். அதை அவர் 2009 இல் என் மகன் 1ஆம் பிரதிவாதி ஹக்கீம்முக்கு செட்டிமெண்ட் எழுதி கொடுத்தார் என்றால் ஆமாம்.அதன் அடிப்படையில் ஹக்கீம் அந்த சொத்தை அனுபவம் செய்துவந்தார் என்றால் ஆமாம். என் பிரமாணவாக்குமூலத்தில் 22.7.1985 இல் ஒரு பதிவு செய்யபட்ட செட்டில்மெண்ட் ஆவணமாக 1ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்தது என்ன ஆவணம் என்றால் குடியிருக்கும் வீட்டில் எங்களுக்குரிய பாதியை என் மகனுக்கு எழுதி வைத்தார். வழக்கு சொத்து என் கணவர் எழுதிகொடுத்த பத்திரத்தின்படி தற்போது வரை எனது மகனுக்கு சொந்தமானது என்றால் ஆமாம். பிரமாணவாக்குமூலத்தில் வழக்கு நடந்ததாக சொல்லியுள்ளேனே அது யாருக்கும் யாருக்கும் நடந்தது என்றால் நான் சொல்லவில்லை. வழக்கு சொத்து காலிமனையா என்றால் ஒரு டீக்கடை நடந்துவருகிறது. என் மகன்தான் வாடகை வாங்குகிறான் என்றால் இல்லை, என் மருமகன் வாங்குகிறார். வா.சா.ஆ.2இல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் என்னுடையதுதான். இந்த கையெழுத்து வழக்கறிஞர் முகிலன் அலுவலகத்தில் போடபட்டது என்றால் இல்லை. என் மகன் ஒருநபரை காண்பித்தார் அவரிடம் வெறும் பேப்பரில் கையெழுத்து போட்டு கொடுத்தேன். நான் கையெழுத்துபோடும்போது வேறு யார் போட்டார்கள் என்றால் எனது இரண்டு மகன்கள், எனது கணவர் எல்லாரும் போட்டோம். என் முன்னிலையில் அந்த மகன் காட்டிய நபரும் கையெழுத்து போட்டார் என்றால் இல்லை. வா.சா.ஆ.3 இல் உள்ள கையெழுத்து என்னுடையதா என்றால் ஆமாம். வா.சா.ஆ.3 ஆவணம் ஏற்படும்போது நான், என் மகன், முருகானந்தம் ஆகியோர் போய்தான் வருவாய் அலுவலகத்திற்கு போய் பதிவு செய்தோம் என்றால் நான் பதிவு அலுவலகத்திற்கே நான் போகவில்லை. தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படம் வா.சா.ஆ.3இல் உள்ளது பதிவு அலுவலகத்தில் எடுக்கபட்டது என்றால் ஆமாம். அதேபோல் கீழ உள்ள படம் என் மகன் ஹக்கீமுடையது என்றால் ஆமாம், அடுத்த படம் அவர் அழைத்து வந்த நபர் என்றால் தெரியவில்லை. வழக்கு யார் போட்டுள்ளார் என்று தெரியாது என்றால் தெரியும். வாதியின் புகைப்படம் வா.சா.ஆ.3இல் உள்ளதை சாட்சியிடம் காட்டி கேட்க அவர் ஒப்புகொள்ளவில்லை.

ஒரு நபரை அழைத்து வந்து எனது மகன் அவர்தான் இனிமேல் சொத்து சம்மந்தமாக பார்த்துகொள்ள போகிறார் என்று சொன்னார் என்றால் ஆமாம். அவரை நான் எத்தனை தடவை பார்த்தேன் என்றால் பார்க்கவேயில்லை. வா.சா.ஆ.2, 3 ஆவணத்தின் உண்மைதன்மையை மறுக்கமுடியாது என்றால் ஆமாம். இடத்தை பார்த்துகொள்வதாக சொல்லபட்ட நபரிடம் நாங்கள் பணம் கொடுத்தோமா என்றால் இல்லை. பார்த்துகொள்வதற்காகதான் வா.சா.ஆ.2, 3 ஆவணம் எழுதி கொடுத்தோம் என்றால் ஆமாம்.

**நான் சொல்ல என் உத்திரவுப்படி**
**தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும்,**
**மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக்**
**காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று**
**ஒப்புக்கொள்ளப்பட்டது.**

NAGARAJAN
Digitally signed by NAGARAJAN
Date: 2026.02.17 15:55:52 +0530

**2வது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**தஞ்சாவூர்.**